# கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை

## கலைப்பீடம்

## கலைமாணி இரண்டாம் வருடப் பரீட்சை - பருவம் II - 2017/2018

## PSC 2226 - சமூக விஞ்ஞான ஆய்வில் முறையியல்

**நேரம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்**

**மூன்று (03)** வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

ஒவ்வொரு வினாவும் அதிகபட்சமாக **இருபது (20)** புள்ளிகளைக் கொண்டிருக்கும்.

---

1. (அ) 'அகவய' (subjectivist) மற்றும் 'புறவய' (objectivist) அறிவாராய்ச்சியியல் என்ற பதங்களினால் அர்த்தப்படுத்துவது யாது? உதாரணங்களுடன் கலந்துரையாடுக.

(ஆ) அரசியல் விஞ்ஞானிகள் தங்களது பகுப்பாய்வில் 'தேசியவாதம்' போன்ற எண்ணக்கருக்களின் மீது கவனம் செலுத்துகின்றனர். நீங்கள் 'தேசியவாதம்' பற்றிக் கற்கவேண்டி இருப்பின், அதற்கான சிறந்த அறிவாராய்ச்சியல் அணுகுமுறை எதுவென நினைத்திருப்பீர்? உமது விடைக்கான காரணங்களை வழங்குக.

(20 புள்ளிகள்)

2. (அ) அறிவு உற்பத்தியானது மூன்று கட்டங்களாக பரிணமித்தது; இறையியல், பௌதீக அதீதம் (metaphysics) மற்றும் விஞ்ஞானபூர்வம். இம்மூன்று கட்டங்களுக்கும் இடையிலான வேறுபாடுகளைக் கலந்துரையாடுக.

(ஆ) 'உய்த்தறி' (deductive) மற்றும் 'தொகுத்தறி' (inductive) தர்க்கத்துக்கு இடையிலான வித்தியாசத்தை உதாரணங்களுடன் விளக்குக.

(20 புள்ளிகள்)

3. (அ) அனுபவவாதம் (empiricism) என்றால் என்ன? ஓர் சுருக்கக் குறிப்பு எழுதுக.

(ஆ) நம்பகமான அறிவுற்பத்திக்கு இறையியல் மற்றும் பௌதீக அதீத முறைகளைவிட அனுபவவாதம் சிறந்தது என பிரான்ஸிஸ் பேகன் (Francis Bacon) ஏன் தர்க்கித்தார்?

(இ) தமது சமூகவியல் விஞ்ஞான ஆய்விற்கு அனுபவவாத முறைகளை உபயோகிக்கும் ஆய்வாளர்களின் அறிவாராய்ச்சியல் நிலை பற்றி நீர் சிந்திப்பது யாது?

(20 புள்ளிகள்)

**(PTO)**

4. (அ) போல் பெயரபாண்ட் (Paul Feyerabend) நவீன விஞ்ஞானத்தின் அறிவார்த்த மேன்மை பற்றி வினா எழுப்பியதுடன், பதிலாக "முறையியல்சார் அராஜகம்" பற்றியும் வாதிட்டார். கலந்துரையாடுக.

(ஆ) இம்ரே லகாடோசின் (Imre Lakatos) 'விஞ்ஞான ஆய்வு நிகழ்ச்சி நிரலின்' ஆய்வறிக்கையை விளக்குக.

(20 புள்ளிகள்)

5. (அ) அறிவின் 'உண்மை' மற்றும் 'விஞ்ஞானத் தன்மைக்கான' மார்க்சிய அணுகுமுறை யாது?

(ஆ) மார்க்சிய மற்றும் நேர்காட்சிவாத (positivist) அறிவாராய்ச்சியியல்களுக்கு இடையிலான ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகள் யாவை?

(20 புள்ளிகள்)

6. பின்வரும் கருப்பொருட்களில் **மூன்றினை (03)** சுருக்கமாக கலந்துரையாடுக:

(அ) தோமஸ் கூனின் 'கட்டளைப்படிமம்' (paradigm) எனும் எண்ணக்கரு

(ஆ) லூயிஸ் அல்தூசரின் 'குறியீட்டு வாசிப்பு' (symptomatic reading) எனும் எண்ணக்கரு

(இ) ஒகஸ்ட் கொம்ட் மற்றும் நேர்காட்சிவாதம்

(ஈ) அரசியல் விஞ்ஞான ஆய்வின் மீதான நேர்காட்சிவாதத்தின் செல்வாக்கு

(உ) தோற்றப்பாட்டியலும் இனத்துவமுறையியலும் (phenomenology and ethnomethodology)

(20 புள்ளிகள்)

******************************************